# வேளாண்மை அறிவியல் நிலையம், நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம்

**ஒருங்கிணைந்த பண்ணையத்தில்** சாதனை படைத்த திரு. ச.கணேஷ் கமலக் கண்ணன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | திரு. ***ச.கணேஷ் கமலக் கண்ணன்.***  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. *சதாசிவம்* |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | கொத்தங்குடி<br>குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 9486509193 |
| 6. | நிலம், நீர் சொத்து விவரங்கள் | : | 10 ஏக்கர் |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | *என்னுடைய 10 ஏக்கர் நிலத்தில் நெல், கரும்பு பயிர்களை மட்டுமே சாகுபடி செய்து வந்தேன். நோய், பூச்சித் தாக்குதல் பிரச்சனைகளும் புயல், வெள்ளம் போன்ற பாதிப்புகளும், கூலி ஆட்கள் பற்றாக்குறையும் இருந்ததால் குறைந்த வருமானமே கிடைத்தது. இதனிடையே நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் ஆலோசனையின் பேரில் எங்கள் 10 ஏக்கர் நிலத்தில் நெல் பயிர் சாகுபடி, மீன் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணைய தொழில்களான ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றை செய்துவருவதால் தினந்தோறும் வருமானம் கிடைக்கின்றது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் 'நந்தனம்' 1 என்ற கோழிக் குஞ்சுகளை எனக்கு செயல் விளக்கத்திற்காக தந்தார்கள். அதனை மூலதனமாக வைத்து பணிகளை மேற்கொண்டேன். என்னிடம் தற்போது 50 கோழிகளும் இரண்டு கறவை மாடுகளும் உள்ளன. சாணத்தை சாண எரிவாயு உற்பத்திக்கும் மீன் குட்டைகளுக்கும், ஆட்டுப் புழுக்கைகளைக் காய்கறித் தோட்டம், வயலுக்கு உரமாக இடுகிறேன். ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் எனக்கு* |

| | | | |
|---|---|---|---|
| 8 | விளைவு | : | எனது வயலில் வயல் தின விழா கொண்டாடப்பட்டு சுற்று வட்டார விவசாயிகளுக்கு புல் கரணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி எங்கள் பகுதி விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம், அனுகூலங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | நெல் பயிர் சாகுபடி, மீன் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணைய தொழில்களான ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றை செய்துவருவதால் ஒரு உற்பத்தி காரணியிலிருந்து கிடைக்கும் உபரி பொருளை மற்ற காரணிகளின் வளர்ப்பிற்கு பயன்படுத்துவதால் உற்பத்தி செலவு குறைவதுடன் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் சீரான வருமானம் கிடைக்கின்றது. |
| | | | ஆண்டிற்கு குறைந்த பட்சம் 10 லட்சம் வருமானம் கிடைக்கின்றது. |

***நெல் சாகுபடியை இயந்திரமயமாக்கிய டிஎன்.டி. ராஜ்குமார்***

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | **திரு. டிஎன்.டி. ராஜ்குமார்**  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. T.N. தசரதன் |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | தேவங்குடி கிராமம், நீடாமங்கலம் , திருவாரூர் மாவட்டம் |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 96008 55150 |
| 6. | நிலம், நீர் சொத்து விபரங்கள' | : | நன்செய் நிலம் - 50 ஏக்கர் |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | என் தந்தை வயதின் காரணமாக சரிவர விவசாயம் செய்ய முடியாததை உணர்ந்த நான் முழு நேர விவசாயத்தில் ஈடுபட்டேன். இந்த நேரத்தில் நெல் விவசாயத்தை எப்படி |

| | | | |
|---|---|---|---|
| | | | இயந்திரம் மூலம் செயல்படுத்துவது என்பது குறித்து வேளாண் அறிவியல் நிலையத்தின் அறிவுரைப்படி நேரடி நெல் விதைப்பு கருவி வாங்கி பயன்படுத்தினேன். வரப்பு கழிக்க அதிக உடல் உழைப்பும், கூலியும் தேவைப்பட நானே ஒரு வரப்பு திருத்தியை வடிவமைத்து, அதனைக் கொண்டு பவர் டில்லர் உதவியுடன் வரப்புகளை கழித்தேன். பள்ளமான நிலத்தில் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்தேன். குறித்த நேரத்தில் நினைத்த அளவில் நடவு செய்ததால் நல்ல விளைச்சல் கிடைத்தது. களை எடுக்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இயந்திர களையெடுப்பானை கொண்டு இடை உழவு செய்ய ஆரம்பித்தேன். தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க நன்கு கோடை உழவு ஒட்டி விதைப்பான் மூலம் நெல் விதைத்து அதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இயந்திர களையெடுப்பானை கொண்டு களையை கட்டுப்படுத்தினேன். மருந்து, உரம் தெளிக்க குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் தெளிக்கக் கூடிய பவர் டில்லர் உதவியுடன் இயங்கக்கூடிய 'பூம்' ஸ்பிரேயர் கருவியை வாங்கினேன். நெல் அறுவடை இயந்திரம் வாங்கி வேலையை மிகச் சுலபமாக செய்து முடிக்கிறேன். |
| 8 | விளைவு | : | வேலை ஆட்கள் பற்றாக்குறையினால் வெறும் 15 ஏக்கர் அளவே சாகுபடி செய்ய முடிந்த என்னால் தற்போது நெல் சாகுடியில் முழுவதும் இயந்திரமயமாக்கலைப் பின்பற்றி 50 ஏக்கர் நிலத்தில் ஆண்டுக்கு மூன்று போகமும் சாகுபடி செய்து அதிக வருமானம் ஈட்டுகிறேன். |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | நெல் சாகுபடியில் முழுவதும் இயந்திரமயமாக்கலைப் பின்பற்றுவதால் கூடுதல் விளைச்சலையும் வருமானத்தையும் பெறலாம். |

## ***துல்லிய பண்ணைய காய்கறி சாகுபடியில் வெற்றி கண்ட நொ.சரவணன்***

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | திரு. ***நொ.சரவணன்***  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. நொண்டிசாமி |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | மேலநாகை கிராமம்<br>மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம் |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 90477 55374 |
| 6. | நிலம், நீர் சொத்து விபரங்கள் | : | புன்செய் - **3** ஏக்கர் |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | என்னுடைய மூன்று ஏக்கர் நிலம் மேட்டுப்பகுதியில் அமைந்ததனால், அதில் யூகாலிப்டஸ் மரத்தை வளர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | | | வந்ததேன். நான் விவசாயம் செய்ய ஆரம்பித்தவுடன் 3 ஏக்கரில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து காய்கறி பயிர்களான கத்தரி, வெண்டை, மிளகாய் போன்ற அனைத்து காய்கறிப்பயிர்களையும் வருடம் முழுவதும் சுழற்சி முறையில் துல்லியப் பண்ணையம் மூலம் சாகுபடி செய்ததினால் என் ஆண்டு வருமானம் உயர்ந்துள்ளது. |
| 8 | விளைவு | : | முதலில் 1/2 ஏக்கர் நிலத்தில் மட்டுமே சாகுபடி செய்ய முடிந்த என்னால் சொட்டு நீர்ப் பாசன உதவியால் எனது 3 ஏக்கர் நிலம், எனது சகோதரர் நிலத்திலும் சாகுபடி செய்து வருகிறேன். துல்லிய பண்ணையம் மூலம் காய்கறி சாகுபடி செய்ததினால் என் ஆண்டு வருமானம் ரூ. 3,00,000 ஆக உயர்ந்துள்ளது. |
| 9. | விவசாயிடமிருந்து கற்று கொண்ட அனுபவங்கள் | : | கோடைக் காலத்தில் வெண்டை சாகுபடி செய்ததால் எனக்கு ஏக்கருக்கு ரூ. 12,000 மட்டுமே கிடைக்கும் . ஆனால் வெங்காயம் சாகுபடி செய்த பொழுது ஏக்கருக்கு லாபமாக ரூ.27,000 கிடைக்கப்பெற்றேன். துல்லியப் பண்ணையத் திட்டத்தின் செயல் விளக்கத்தினைக் கண்ட எனது கிராமத்தை சார்ந்த விவசாயிகள் துல்லியப் பண்ணையத் தொழில்நுட்பத்தைத் தங்கள் வயலில் அதிக ஆர்வமுடன் செயல்படுத்தி கூடுதல் வருமானம் ஈட்டி வருகின்றனர் |